சித்தர் மரபின் தோற்றமும் வளர்ச்சியும்

(The Tradition of Siddhar: Origin and Development)

சுப்பிரமணியம் சந்திரன்

(Subramaniam Chandran)

பேராசிரியர் அரங்க இராமலிங்கனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு,
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை,
2 பிப்ருவரி 2024

Professor Aranga Ramalinganar Endowment Lecture,
Department of Tamil Literature, University of Madras, Chennai,
2 February 2024

சித்தர் மரபின் தோற்றமும் வளர்ச்சியும்

சுப்பிரமணியம் சந்திரன்

முன்னுரை

சித்தர் மரபு பற்றித் தெளிவாக அறிவதற்கு அதன் தோற்றம், வளர்ச்சி மற்றும் தெளிவான ஒரு வரையறை ஆகியவை நமக்குத் தேவைப்படுகின்றன. இவற்றுக்கு நாம் நீண்ட காலம் பின்னோக்கிச் செல்ல வேண்டும். அன்றாட வாழ்வியல் ஓட்டத்திலிருந்து பின்நோக்கிச் சென்று கடந்த கால அனுபவங்களை மீட்டெடுக்க பெரும்பாலும் நூல்களே நமக்குத் துணை நிற்கின்றன. ஆனால் இத்தகைய நூல்கள் குறிப்பிடும் நிகழ்வுகளும் அனுபவங்களும் மொழிவடிவம் தோன்றா காலம் தொடங்கி தொடர்கின்றன. மனித இனத்தின் வளர்ச்சியுடன் நெருக்கமாக அவை பயணித்துள்ளன. நூல்களில் காணப்படுபவை அன்றாட அனுபவங்களின் பிரதிபலிப்பா அல்லது கற்பனை எண்ணங்களா என்பதைத் தெளிவாக அறிவதற்கு மீண்டும் நமக்கு அத்தகைய அனுபவங்களே உறுதி செய்ய முடியும். வேறு வகையில் சொன்னால், மனித இனத்தின் ஆன்மிகப் பயணத்தில் கண்டறிந்த அல்லது கண்டுணர்ந்த உண்மைகள் யாவும் குறிப்பிட்ட ஒரு நூல் இயற்றப்பட்டதற்கு பிறகே நிகழ்ந்தன என்று கூறமுடியாது. மொழி வடிவங்கள் தோன்றுவதற்கு முன்பே மனித இனத்தின் வாழ்வியலுடன் ஆன்மிக அனுபவங்கள் இணைந்து வந்துள்ளன என்று நாம் தாராளமாகக் கூறிக்கொள்ளலாம். மனிதன் தனது உணர்வுகளையும் சிந்தனைகளையும் மொழி வடிவத்திலும் பண்பாட்டு கட்டமைப்புகளிலும் வெளிப்படுத்தத் தொடங்கிய பிறகு மரபு வளர்ச்சியில் சிந்தனைகள் ஆதிக்கம் பெற்று சாத்திரங்களாக இயற்றப்படும் போக்கு அதிகரித்தது. சாத்திரங்களுக்கு புனிதத்தன்மை ஏற்றப்பட்டதன் காரணங்களில் ஒரு குறிப்பிட்ட சமூக நலனைத் தாங்கி நிற்கும் வெளிப்பாடாகவும் காணப்படுகிறது. இதற்கு மாறாக, சித்தர் மரபில் வந்த சாத்திரங்கள் புனிதத் தன்மையைக்

கொண்டவை என்றில்லாமல் அதைப் பயிலும் மனிதரே அதற்கான தகுதியைப் பெறுகின்றார்.

சித்தர் மரபின் தோற்றம்

சித்தர் மரபின் தோற்றத்தை அனுபவம் சார்ந்த மரபு மற்றும் சாத்திரம் சார்ந்த மரபு என்ற இரண்டு கோணங்களில் பார்க்கலாம். அனுபவம் சார்ந்த மரபு மொழி வடிவம் தோன்றுவதற்கு முன்பே இருந்து வந்துள்ளதை நாம் அனுமானிக்க முடியும். ஒலி அவர்களுக்கு அறிவைக் கடத்திவரும் சாதனமாக இருந்துள்ளது. விலங்குகளிடம் இந்த ஒலிப்பின் இயக்கமே சிந்தனையோட்டமாக அமைந்துள்ளது. மனிதர்களிடம் இது சற்று மேம்பட்ட வகையில் காணப்படுவதை தற்போதுள்ள சான்றைக் கொண்டு எடுத்துக்காட்ட முடியும். எழுதப்படிக்கத் தெரியாத மனிதர் எவ்வாறு அறிகின்றனர் அல்லது சிந்திக்கின்றனர்? நவீனக் கருவிகள் கண்டுபிடிக்காத காலத்தில் பார்வையற்ற, காதுகேளாத பேசமுடியாத மனிதர் எவ்வாறு ஒன்றை அறிந்திருப்பார் அல்லது சிந்தித்திருப்பார்? இந்த சூழ்நிலையில், காண அல்லது கேட்க முடியாதபோதும், நான் இருக்கிறேன் என்று ஒருவர் உணர்ந்திருக்கும் தருணமே ஓர் அனுபவத்துக்குப் போதுமானது. எழுத்து மற்றும் மொழிக்கு முன்பே உணர்வுநிலை இருந்துவருவதை அனுமானிக்கும் பொழுதில் சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்பே மனிதர் உண்மையை அறிந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இயற்கைக்கும் மனிதருக்கும் உள்ள நேரடி உறவில் இடைப்பட்ட பொருள் எதற்கும் இடமில்லாத காலம் இருந்துள்ளது. அனுபவம் சார்ந்த சித்தர் மரபின் தோற்றத்தை இவ்வாறு விளக்கலாம்.

சாத்திரங்களால் ஏற்பட்ட ஒட்டு மொத்த விளைவு என்னவென்றால், இயற்கையான தனி மனித ஆன்மிக அனுபவத்தை ஒரு செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு வடிவத்துக்குள் பொருத்தி, சடங்குகள் சார்ந்த பெயர்களைக் கொண்டு அடையாளம் காணும் வகையில் பரிணாமம் பெற்றது. இவ்வாறானா இயற்கையான அனுபவங்களை செயற்கையாகக் காட்சிப்படுத்துவதற்கு மதம்

என்ற அடையாளம் மிகவும் வசதியாக அமைந்துவிட்டது. இதை வலுப்படுத்தும் முயற்சியாக கோட்பாடுகள் கட்டமைக்கப்பட்டன. இலக்கியம், கலை, பண்பாடு, ஓவியம், சிற்பம், திருவிழாக்கள் ஆகியவை பெருமளவு மதப்பிரிவுகளை கட்டமைத்து விரிவாக்கி மக்களிடம் கொண்டு செல்வதற்கு உதவின. அந்தணர்களும் அரசர்களும் தனித்திறன் படைத்த பலதரப்பட்ட மனிதர்களை வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டதால் இத்தகைய வளர்ச்சி பெறப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு இணையாக அறநெறிகளை உபதேசிக்கும் சாத்திரங்கள் பெரும்பாலும் மதம் சார்ந்தே இயற்றப்பட்டன. ஒரு சில நூல்கள் மதம் கடந்த பொதுத்தன்மையைக் கொண்டு அமைந்தன. இத்தகைய நூல்கள் மதம் சார்ந்த கருத்துகளையும் கதைகளையும் ஆங்காங்கே தவிர்க்கவியலாத வகையில் பிரதிபலித்திருந்தாலும் மத நம்பிக்கையை முன்னிலைப் படுத்தின என்று அத்தகைய சில நூல்களைக் கொள்ள முடியாது. இந்த வரிசையில் யோகநெறியைக் காட்டும் நூல்கள் பெருமளவு இடம்பெற்றுள்ளன. சாத்திரம் சார்ந்த சித்தர் மரபின் தொடக்கத்தை இவ்வாறு அனுமானிக்கலாம்.

இந்த இடத்தில், அன்றாட வாழ்வியலின் அடிப்படையில் மனிதரின் அறிவு செயல்படும் வகையை ஒருபுறமும், மதம் மற்றும் அறநெறி சார்ந்த கருத்துகளின் வலியுறுத்தல்களை மறுபுறமும் பொருத்தி ஆராய்வது அவசியம். மனிதர் தாம் பிறருக்கு பயனுள்ள வகையில் செயல்படுவதற்கும் பிறரைப் தமக்காகப் பயன்படுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டை இங்கு காண வேண்டும். இந்த இரண்டு போக்குகளும் தொடர்ந்து வெவ்வேறு கட்டங்களில் நிகழ்ந்து வருபவை. மதம் மற்றும் அறநெறி நூல்களை ஒருவர் பின்பற்றுவதிலும் இத்தகையப் போக்குகளைப் பார்க்க முடியும். இதன் பரிணாம வளர்ச்சியை எஜமானன்-அடிமை, ஆளும் வர்க்கம்-அடிபணியும் வர்க்கம் என்ற நீட்டிப்புடன் தொடரும்.

சித்தர் மரபின் தோற்றத்தை சிந்தித்தப் பிறகு அவர்கள் பற்றிய ஒரு இலக்கணத்துக்கு தற்போது வருவோம். புறவயப்பட்ட சாத்திரங்கள், சடங்குகள், கேளிக்கைகள் ஆகியவற்றைக் காட்டிலும் ஒருவரின் அகத்தையும் அதன்

ஆதாரத்தையும் கண்டுணர ஒருவரைத் தாங்கி நிற்கும் உடலும் அறிநிலையும் மிக்கப் பயனளிக்கும் என்பது அவர்களின் தத்துவ இலக்கணமாக அமைந்துள்ளது. உடல், உயிர், வாசி ஆகிய மூன்றும் இணைந்தே செயல்படுகின்றன. ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை என்பதும் அவர்களின் கண்டறிதலாகும். இந்த வரையறைக்குள் இன்னுமொரு உண்மை அடங்கியுள்ளது. அகம் என்று சொல்லுமிடத்தில் உடலும் அறிநிலையும் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பது விளக்கப்படுகிறது. தூலம், சூக்குமம், காரணம் ஆகிய உடல்கள் முறையே விழிப்பு, கனவு, ஆழ்ந்த தூக்கம் ஆகிய அறிநிலைகளை உணர்த்துகின்றன. விழிப்பு நிலையில் அறிந்துணர்ந்து செயலாற்றும் ஞான மற்றும் கர்மேந்திரியங்கள் எனும் பத்து கருவிகள் நான் என்ற உணர்வுடன் இயங்குகின்றன. கனவில் நான் என்ற உணர்வுடன் ஞானேந்திரியங்கள் எனும் ஐந்து அறிந்துணரும் கருவிகள் செயல்படுகின்றன. ஆழ்ந்த தூக்கத்தில் மேற்குறிப்பிட்ட பத்து கருவிகளும் நான் என்ற உணர்வும் செயல்படுவதில்லை. ஆனால் உடல், உயிர், வாசி ஆகியவை நான் என்ற கட்டுப்பாடு இன்றி இயங்குகிறது. அதாவது என்னுடன் தொடரும் உடல், உயிர், வாசி ஆகியவற்றை நான் அறியாத வகையில் எனது அகத்தில் உள்ள ஒன்று இயக்குகிறது என்பதை அனுமானிக்கலாம். அனுமானித்ததை நான் கண்டறிய முடியுமா என்பது முக்கிய வினாவாகும். இந்த வினாவுக்கு விடையளிக்கும் வகையில் அடுத்தக் கட்டத்துக்கு சித்தர்கள் நம்மை அழைத்துச் செல்கின்றனர். ஒரு வழிமுறையைச் சொல்கின்றனர். அது சித்தர்கள் காட்டும் யோகநெறியாகும்.

வழிமுறைக்குச் செல்வதற்கு முன்பு சில சொற்களின் பொருளைப் பார்க்கலாம். சித்தர் எனும் பதத்துக்கு "அனைத்துக்கும் மேலான அறிவைப் பெற்றவர்" என்று நாம் எளிதாகப் பொருள் கொள்ளலாம். மேலான அறிவைக் கொண்டிருக்கும் பொருளில் புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தன் என்றும், பெரியாழ்வரின் இயற்பெயர் விஷ்ணுசித்தர் என்றும் அமைந்துள்ளதை நாம் கவனிக்கலாம். அந்த மேலான அறிவுக்கு சிவம் என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது. மேலும், சிவலோகம், சிவயோகி, சிவசித்தர் ஆகிய மூன்று சொற்கள் அதில்

பயன்படுத்தப்படுகின்றன. சிவயோகத்தைக் கொண்டு சிவலோகம் கண்டவர்களுக்கு சிவசித்தர் என்ற அடையாளம் அளித்துள்ளதாகத் தெரிகிறது. இதை திருமந்திரம் காட்டும் மூன்று பாடல்கள் கொண்டு நாம் அறியலாம்.

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்
அவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே (திருமந்திரம். 122)

வெளியின் வெளிபோய் விரவிய வாறும்
அளியின் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியின் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளிவும் அவரே சிவசித்தர் தாமே (திருமந்திரம். 124)

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே (திருமந்திரம். 125)

இந்த விளக்கம் சாத்திரம் குறிப்பிடும் வகையில் அமைந்திருந்தாலும், அவற்றில் உள்ளடங்கிய யோகநெறியை எடுத்துக்காட்டுவதாக உணரலாம். வாழ்வியல் நோக்கில் சொன்னால், "உயர்ந்த ஒன்றை அறிந்து, உணர்ந்து, வல்லமை பெற்றோர் சித்தர் ஆவர்" என்று இலக்கணம் கொள்ளலாம். இத்தகைய மரபில், இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகின் பல இடங்களில் பல்வேறு காலங்களில் இருந்து வந்துள்ளன. மதங்கள் முறையாகக் கட்டமைப்பதற்கு முன்னதாகவே இத்தகைய மரபு இருந்தது. ஆனால் அத்தகைய மரபுகளில் இந்தியாவில் காணப்படும் நுட்பமான யோகநெறிகள் பின்பற்றப்படவில்லை. இந்தியா என்று நாம் கூறும்போது அதில் பலபிரிவுகளை உள்ளடக்கிய இந்துமதம்,

சமணம், பௌத்தம் ஆகியவை மட்டுமின்றி, இவற்றின் நீட்சியாக தெற்கு மற்றும் தென் ஆசிய நாடுகளில் வழக்கத்தில் உள்ள பௌத்தம் மற்றும் தாவோ மரபுகளும் ஆங்காங்கே இணைந்து பயணித்துள்ளன. ஆனால் மத்திய கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் காணப்படும் சித்தர் மரபில் யோகநெறி சார்ந்த உத்திகளுக்குப் பதிலாக தத்துவ விளக்கம், தியானம் போன்றவை வலியுறுத்தப்பட்டுள்ளன. மதங்களை முறையாகக் கட்டமைப்பதற்கு சித்தர் போன்ற வல்லமை கொண்ட ஒரு நாயகன் அறநெறிகளை உபதேசிக்கும் வகையில் முன்னிலைப்படுத்தப்படுகிறான். அறநெறிகளைத் தாண்டி அவனது உயர்வான சக்தி போற்றப்பட்டு மக்களை ஆளும் வல்லமை உருவாக்கப்படுகிறது. எனவே சித்தர் மரபு என்பது மதங்களுக்கு ஒரு எதிர்வினை என்ற கருத்து பிற்காலத்தில் தோன்றிதாக இருக்கலாம். உண்மையில் மதங்களை முறையாகக் கட்டமைக்க அவர்களின் செயல்பாடுகள் ஏதோ ஒரு வகையில் ஊக்கம் அளித்துள்ளன.

இந்திய சித்தர் மரபு

உலகின் பல இடங்களில் சித்தர் மரபைக் காட்டும் ஆதாரங்கள் இருந்தபோதிலும், நமது கருத்தை இந்திய எல்லைக்குள் அடக்கி ஆராய்வோம். இந்திய சித்தர் மரபு பற்றிய செய்திகளுக்கு பல்வேறு மொழிகளில் இயற்றப்பட்ட நூல்கள் கிடைக்கின்றன. தமிழ், சமஸ்கிருதம், பாலி, அவதி, சீனம், திபெத், அரபி, காஷ்மீரி, வங்காளம் ஆகிய மொழிகளில் பல நூல்கள் கிடைக்கின்றன. அவற்றின் காலம் பற்றிய உத்தேசமாக அறிவதுகூட கடினம். காரணம், செவிவழியாக பலதலைமுறைகள் கடத்தப்பட்டு ஒரு கட்டத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகள் அடுத்தடுத்தத் தலைமுறைகளில் பிரதியெடுக்கப்பட்ட வளர்ச்சிகளில் அந்தந்த மொழிக்குரிய எழுத்து வடிவமும் மாறிவந்துள்ளது. அச்சு ஏற்றப்படுவதற்கு பயன்பட்ட சுவடிகளில் பல நவீனகால எழுத்துவடிவத்தை கொண்டிருந்தன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மூலச் சுவடிகள் ஒருவேளை கிடைத்திருந்தால் மொழியியல்

வல்லுநர்கள் காலம் பற்றியக் குறிப்பை நமக்கு அளித்திருக்க முடியும். ஆனால் பெரும்பாலான சுவடிகள் பிற்காலப் பதிவுகளை மட்டுமே கொண்டிருக்கின்றன. எனவே அவற்றில் காணப்படும் கருத்துகளையும் நமது அன்றாட அனுபவங்களையும் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இருந்தபோதிலும், அந்த நூல்கள் கூறும் தகவல்களில் காணப்படும் ஒற்றுமை அல்லது வேறுபாடு அடிப்படையில் சித்தர் மரபு பற்றி நாம் புரிந்து கொள்ளலாம். இந்த வகையான நூல்கள் பெருமளவு 11 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை இயற்றப்பட்டும் தொகுக்கப்பட்டும் உள்ளன. இவற்றில் பெரும்பாலான ஓலைச் சுவடிப் பிரதிகள் அச்சேற்றப்பட்டது 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில்தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலும், சமஸ்கிரும், பாலி, திபெத் மற்றும் சீன மொழிகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டன. வேறுவகையில் சொன்னால், ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படாமல் இருந்தால் சமஸ்கிருத சுவடிகள் பலவற்றை நாம் அறிந்திருக்க முடியாது. சமஸ்கிருத இலக்கியத்தை பரப்பி அதற்கு இன்றும் உயிரூட்டி வருவது ஆங்கிலம் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு நிகழ்வை 200 ஆண்டுகளுக்கு முன்பு பதிப்பிக்கப்பட்ட ஒரு நூல் வாயிலாகத் தெரியவரும் பொழுது அதன் நம்பகத்தன்மையை நாம் எவ்வாறு தீர்மானிப்பது? இதற்கு ஒரே வழி அந்த அனுபவத்தை ஒருவர் பெறுவது மட்டுமே. சித்தர் மரபு பற்றி ஆராய்வதற்குப் பயன்படும் நெறிகளில் இது ஒன்றுதான் சிறப்பாக இருக்க முடியும்.

சித்தர் மரபில் முக்கியமாகக் காணப்படும் சொல் “யோகம்“ என்பதாகும். யோகம் என்ற சொல் முதலில் கட உபநிடதத்தில் காணப்படுகிறது. நசிகேதன் எனும் சிறுவனுக்கும் யமனுக்கும் நடந்த உரையாடல்களில் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. உடலைத் தேருக்கும், தேரில் அமர்ந்துள்ளவன் ஆன்மாவாகவும், தேரோட்டி புத்தியாகவும், ஓடுவது மனமாகவும், குதிரைகள் புலன்களாகவும், வெளியே காணப்படுவது விவகாரங்களாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. பகவத் கீதையில் இது மீண்டும் உபதேசிக்கப்படுகிறது. பகவத் கீதையில் சாங்கிய யோகம் மற்றும்

ஹடயோகம் பற்றிய கருத்துகளைக் காண முடியும். யோகநெறி பற்றிய செய்திகளை 108 உபநிடதங்கள் கொண்ட தொகுப்பில் 20 உபநிடதங்கள் அளிக்கின்றன. பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட இவை யோக உபநிடதங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. புத்தர் தமது சீடர்களுக்கு நாக்கை உட்புறம் வளைத்து அண்ணாக்கை அழுத்தி வாசியை செலுத்தும் கேசரிமுத்ரா எனும் யோக உத்தியை கற்பித்ததாகக் கூறப்படுகிறது. யோகம், தியானம், முத்திரை ஆகியவற்றை புத்தர் தமது சீடர்களுக்கு விளக்கிய சான்றுகள் உள்ளன. இதற்கு முன்பு, புத்தரே பலவகையான ஹடயோகம் உள்பட பல பயிற்சிகளைச் செய்து, அதன் பிறகு அவற்றில் சற்று அதிருப்தி கொண்டு தனக்கே உரித்தான அனுபவங்களை உபதேசித்துள்ளார். புத்தரின் நெறிகளுக்குப் பிறகு பதஞ்சலியின் யோக சூத்திரம் அட்டாங்க யோகத்தை விளக்கும் தருணத்தில் சாங்கியம், வேதாந்தம், பௌத்தம், சமணம் ஆகிய கருத்துகள் உள்ளடங்கியுள்ளதைக் கவனிக்க முடியும். 196 சூத்திரங்களில் பதஞ்சலியின் அட்டாங்க யோகம் சொல்லப்பட்டுள்ளது. யோகசூத்திரத்தில் கூறப்பட்டக் கருத்துகள் சில நான்காம் நூற்றாண்டில் புகழ்பெற்றிருந்த பௌத்த மத யோகச்சார தத்துவத்தில் பிரதிபலித்துள்ளது.

பதஞ்சலியின் சூத்திரங்களை விளக்கி பிற்காலத்தில் ராஜயோகம் எனும் கருத்தை சுவாமி விவேகானந்தர் பிரபலப்படுத்தினார். உடலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஹடயோகம் பதஞ்சலியின் அட்டாங்க யோகத்தின் ஒரு பகுதியை விரிவாகச் சொல்கிறது. உடலை அடிப்படையாகக் கொண்ட ஹடயோகத்துக்கு நீண்ட மரபு காணப்படுகிறது. ஹடயோக நெறியில் அடிப்படைச் செயல்பாட்டை பகவத் கீதையில் எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை பின்வருமாறு காணலாம்.

> "புறப்பொருள்களை வெளியிலேயே விட்டு, பார்வையைப் புருவங்களின் மத்தியில் நிறுத்தி, நாசியின் வழியாகச் செல்லும் பிராணன், அபானன் என்ற மூச்சுகளைச் சமப்படுத்தி, புலன்கள், மனம், புத்தி இவைகளை அடக்கி, ஆசை, பயம், கோபம் இவைகளை நீக்கி, மோட்சத்திலேயே

முழுநோக்கம் கொண்டவன் எப்பொழுதும் மோட்மடைந்தவன் என்றே கருத வேண்டும்." (பகவத் கீதை, 5-கர்மசந்நியாச யோகம், 27-28)

"உடல், தலை, கழுத்து இவைகளை நேராகவும், அசையாமலும், நிலையாகவும் வைத்துக்கொண்டு இங்கும் அங்கும் பார்க்காமல் தன் நாசி நுனியைக் கண்களால் பார்த்துக்கொண்டு, அமைதியான மனத்துடன், பயமற்றவனாகவும் பிரம்மசரிய விரதம் பூண்டவனாகவும் இருந்து, மனத்தைக் கட்டுப்படுத்தி, என்னிடமே மனத்தைச் செலுத்தி, யோக நிலைபெற்று, என்னையே குறிக்கோளாகக் கொண்டு அமர வேண்டும்." (பகவத் கீதை, 6-தியான யோகம், 13-14)

"புலன்களை வெளியே செல்லாமல் தடுத்து, மனத்தை இதயக்கமலத்தில் நிறுத்தி, தன்னுடைய பிராணனைச் சிரசில் நிலைபெறச் செய்து, யோகதாரணையை மேற்கொண்டு, பிரம்மத்தைச் சொல்லும் ஓம் என்னும் ஓர் அக்ஷரத்தைச் சொல்லிக் கொண்டு, என்னை நினைத்துக் கொண்டு எவனொருவன் உடலை விடுகிறானோ அவன் உயர்ந்த நிலையை அடைகிறான்." (பகவத் கீதை, 8-அக்ஷரபிரம்ம யோகம், 12-13)

அமிர்தசித்தி என்ற பௌத்த நூல் யோகசித்திகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 11 மற்றும் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே தோன்றிய பல நூல்கள் விந்தடக்கத்தை வலியுறுத்தி ஹட யோக வழிமுறையில் ஞானத்தை அடைவதைக் குறிப்பிடுகின்றன. குண்டலினி சக்தியை தூண்டுவதற்கு மகாமுத்திரை, பத்மாசனம், சித்தாசனம் போன்ற ஆசனங்களை புத்தர் பின்பற்றினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் நாத சித்தர்கள் என்போர் குண்டலினி மற்றும் சக்கரங்கள் பற்றி பெருமளவு விளக்கியுள்ளனர். யோக உபநிடதங்களில் குண்டலனி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பிற்காலத்தில், இலய யோகம் மற்றும் முத்திரைகள் இவற்றில் முக்கியத்துவம்

பெற்றன. இதன் பிறகு சக்தி வழிபாட்டை ஹட யோகம் வழியுறுத்திய பிறகு சைவத்தில் யோகநெறி பிரபலமாகப் பேசப்பட்டது. அதே வேளையில் ஆசனங்களும் வாசிப் பயிற்சிகளும் மேலான உண்மையைக் கண்டறிவதற்கு பயன்படவில்லை என்று ஏற்கெனவே புத்தர் குறிப்பிட்டுள்ளார். காலசக்ர தந்திரம் என்ற புத்தமத நூலில் தாந்திரகத்தில் ஆண்-பெண் பாலியல் சடங்குகள் விளக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்-பெண் அமர்ந்தநிலை சேர்க்கையில் வாசியை சுழிமுனையில் செலுத்தும்போது விந்து வெளிப்படாமல் பேருணர்வை அடையும் வழியைக் காட்டுவதாகும். இந்த சடங்கில் சில தெய்வ உருவங்களும் மந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

எட்டாம் நூற்றாண்டில் வஜ்ரயாணம் என்ற பௌத்தமதப் பிரிவு திபெத், சீனா, ஜப்பான், நேபாளம் ஆகிய இடங்களில் பரவத் தொடங்கியது. யோக மரபில் அதுவரை புறக்கணிக்கப்பட்ட பெண்கள், தாந்திரக மரபில் முக்கியமாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு தக்க இடம் அளிக்கப்பட்டது. அதுவரை சித்தர் மரபு என்பது ஆண்களுக்கானது என்றும் யோகத்தில் முன்னேறுவதற்கு பெண்கள் தடையாக இருப்பர் என்ற கருத்தை இது மாற்றியது. சைவத்தில் காணப்படும் இலிங்க வழிபாட்டுக்கு தாந்திரிக விளக்கங்கள் அளிக்கப்பட்டன. சிவன்-சக்தி என்ற இணைப்பின் அடிப்படையில் தத்துவம் விரிவுபடுத்தப்பட்டது. இலிங்கம் பற்றிய தத்துவ விளக்கம் சுவேதஸ்வர உபநிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உபநிடதம் பிற்காலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்பட்டாலும் சைவத்தில் இதன் பிரதிபலிப்பைக் காணலாம். இந்துமத வழக்கத்தில் குப்ஜிகாமதா தந்திரம் என்ற உத்தி குண்டலினி மற்றும் சக்கரங்கள் பற்றி பேசியது. இந்த பயிற்சிகளின் விளைவாக சித்திகளையும் முக்தியையும் அடைந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டது. வைணவ மரபிலும் குண்டலனி மற்றும் சக்கரங்கள் பற்றிய பயன்பாடு இருந்துள்ளதை நாரத பஞ்சராத்ரா எடுத்துக்காட்டுகிறது. இதை சிவன் நாரதனுக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் பிரபுபதாவின் பக்தி அமைப்பு கிருஷ்ணா-ராதா லீலைகளை முன்னிலைப்படுத்தி பக்தியை வளர்க்கச் செய்தது.

10 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மச்சேந்திரநாதர், 11 ஆம் நூற்றாண்டில் கோரக்கநாதர் ஆகியோர் ஹடயோகத்தை முன்னிறுத்திய பிறகு நாதமரபு பள்ளிகள் பரவலாகத் தோன்றத் தொடங்கின. கோரக்ஷ சதகம் என்ற நூல் துறவிகளுக்கான ஹடயோகத்தை எடுத்துக் காட்டுகிறது. இந்த நூலில் குறிப்பாக குண்டலினியை ஏற்றும் முறையை விவரிக்கிறது. நோய்களை நீக்க ஆசனங்கள், ஊழ்வினையைப் போக்க பிராணாயாமம், மனதைத் திடப்படுத்த பிராத்யாகாரம் ஆகியவற்றின் பயன்பாட்டை இந்த நூல் குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஹட யோகத்தைக் கற்கும் யோகிகள் நாத மரபைச் சார்ந்தவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டனர். ஆதிநாதனாவும் ஆதியோகியாகவும் ஆதிசித்தராகவும் சிவன் அடையாளப்படுத்தப்பட்டு அந்த மரபு முந்தைய காலத்திலிருந்து பரிணாமம் அடைந்து வந்ததாகக் கருதப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டு வரையில் இந்தப் பள்ளியைச் சார்ந்த யோகிகள் பலர் குண்டலினி, சக்கரங்கள், முத்திரைகள் பற்றிய விளக்கங்களை நடமுறையிலும் நூல்கள் வாயிலாகவும் காட்டி வந்தனர். அமிர்தசித்தி, தத்தாத்தரேய யோகசாத்திரம், விவேகமார்தாண்டம் ஆகிய நூல்கள் விந்தடக்கத்தை வலியுறுத்தின. நாத மரபில் வந்த சித்தர்கள் பற்றிய எண்ணிக்கை 4 முதல் 25 வரையில் பல்வேறு வகையில் நூல்கள் பதிவு செய்துள்ளன. 10 ஆம் நுற்றாண்டைச் சார்ந்த அபிநவகுப்தர் இயற்றிய தாந்திரக யோகம் என்று நூல் மச்சேந்திரநாதரை ஒரு சித்தர் என்று குறிப்பிடுகிறது. அபிநவகுப்தர் அத்வைத வேதாந்தம் மற்றும் சைவ தத்துவங்களில் புலமை பெற்றவர் என்பதை இங்கு கவனிக்கத் தக்கது. இந்த மச்சேந்திரநாதர் திபெத்திய பௌத்த மதத்தில் லுய்பா என்றும் நேபாளத்தில் அவலோகதீசுவரர் என்றும் அறியப்படுகிறார். அக்காலத்தில் யோகநெறியைப் பொருத்தமட்டில் பௌத்த மதத்தின் செல்வாக்கு அதிகமாகவே காணப்பட்டது. 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நவநாத சரித்திரம் என்ற தெலுங்கு நூல் நாத மரபைச் சார்ந்த ஒன்பது சித்தர்களைக் குறிப்பிடுகிறது. நாத மரபு என்பதே சித்தர் அல்லது பௌத்த மதத்தின் அவதூத மரபின் நீட்சிதான் என்றும் சிலர் கருதுகின்றனர். இத்தகைய சித்தர்கள் பத்தி இயக்கத்தை சார்ந்த கபீர் போன்றவர்களால் மிகவும் மதிக்கப்பட்டனர்.

ஹடயோகம் பற்றிய முந்தைய ஆதாரங்களை தொகுத்து முறைப்படுத்தி 15 ஆம் நூற்றாண்டில் சுவாத்மராமா என்பவர் ஹடயோகபிரதிபிகா என்ற நூலை இயற்றினார். கோரக்ஷ சதகத்திலிருந்து 30 சூத்திரங்களை இந்த நூல் பயன்படுத்தியுள்ளது. இந்த நூல் ஆதிநாதன் என்ற சிவன், மச்சேந்திரநாதர், கோரக்ஷநாதர் உள்ளடங்கிய 35 சித்தர்கள் பற்றிய பட்டியலை அளிக்கிறது. மேலும், சத்கர்மம், ஆதாரங்கள், 15 ஆசனங்கள், முத்திரைகள், பிராணாயாமத்தின் பல்வேறு வகைகள், மற்றும் தியானம் பற்றி இந்த நூல் விளக்குகிறது. அமிர்தசித்தி மற்றும் குப்ஜிகாமதா தந்திரம் நூல்களில் காணப்படும் விந்துவை மேல்நோக்கித் திருப்பும் உத்திகளில் பற்றிய வேறுபாடுகளையும் பதிவு செய்துள்ளது. முறைப்படுத்தப்பட்ட ஹடயோகபிரதிபிகா என்ற நூலுக்குப் பிறகு பல நூல்கள் தொடர்ந்து புதிய அனுபவங்கள் மற்றும் விளக்கங்களுடன் தோன்றத் தொடங்கின. அமருலாக சாசனா என்ற நூலின் பிரதிகள் 16 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் சில பகுதிகள் சீனாவின் ஜின்சியாங் பகுதியில் கிடைத்தன. குண்டலினி சக்தியை எழுப்புவதற்கு முத்திரைகளைக் காட்டிலும் கேசரிமுத்திரை மற்றும் உத்கடா ஆசனம் பயனுள்ளதாக இந்த நூல் குறிப்பிடுகிறது. யோகசிந்தாமணி என்ற 17 ஆம் நூற்றாண்டு நூல் அட்டாங்க யோகத்தைப் பற்றி விளக்குகிறது. ஒரு பிரதியில் 34 ஆசனங்களும், மற்ற சில பிரதிகளில் கூடுதலாக 84 ஆசனங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதே காலத்தைச் சார்ந்த சிவசம்ஹிதை எனும் நூல் சைவம், வேதாந்தம் மற்றும் சாக்தம் ஆகியவற்றை ஒன்றிணைத்து யோகநெறியைக் காட்டியது. ஸ்ரீவித்யா, யோனிமுத்திரை ஆகியவற்றைப் பயன்படுத்தி குண்டலினி சக்தியை எழுப்பும் வகையை இது முக்கியமாக விளக்குகிறது. வீடுபேறு பெறுவதற்கு பல்வேறு வழிகள் இருந்தபோதிலும் யோகவழியே சிறந்தது என்று இந்து நூல் குறிப்பிடுகிறது. முதன்முறையாக பக்ஷிமோத்தாசனம் என்ற வகையை இது குறிப்பிடுகிறது. இல்லறவாசிகள் யோகமுறையைப் பயன்படுத்தி உயர்நிலையை அடைய முடியும் என்றும் இது குறிப்பிடுகிறது. ஹடரத்னாவளி எனும் நூலில் பத்து முத்திரைகள், 8 தூய்மைச் செயல்கள், 9 வகையான கும்பகங்கள், 84

ஆசனங்கள் ஆகியவற்றை இது காட்டுகிறது. நாதனுசந்தனா என்ற அக ஒலியைக் கேட்கும் உத்தியையும் இது குறிப்பிடுகிறது. கேரண்ட சம்ஹிதை எனும் நூல் ஏழு அங்கங்களைக் கொண்ட யோகநெறியை உபதேசித்தது. பதஞ்சலியின் யோகம் எட்டு அங்கங்களையும், கோரக்ஷ சம்ஹிதை ஆறு அங்கங்களையும் ஹடயோக பிதிபிகா நான்கு அங்கங்களையும் கொண்டுள்ளதை இங்கு கவனிக்க வேண்டும். கடஸ்தயோகம் என்ற பெயரில் 32 ஆசனங்கள், 25 முத்திரைகள், 10 பிராணாயாமங்கள் ஆகியவற்றை இந்த நூல் குறிப்பிடுகிறது. 18 ஆம் நூற்றாண்டில் ஹடபிரதிபிகா சித்தாந்த முக்தாவளி எனும் நூல் முந்தைய ஹடயோகபிரதிபிகாவை விரிவாக்கி புதிய குறிப்புகளுடன் இயற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் ராமாநந்தி இயற்றிய யோகபிரதிபிகா எனும் நூல் 84 ஆசனங்கள், 24 முத்திரைகள், 8 கும்பகங்கள் ஆகியவற்றை விளக்குகிறது.

ஹடயோக நெறியை வேறுபாடுமின்றி அனைத்து மக்களும் பின்பற்ற முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய தத்துவ மற்றும் மத சாத்திரங்களிலிருந்து இவை வேறுபட்டு மக்களை பொதுவாகக் கருதியுள்ளதை இங்கு கவனிக்க வேண்டும். ஹடயோக நெறியில் மதம் சார்ந்த சடங்குகள் பின்பற்றப்படுவதில்லை.

யோகிகளுக்கு மதிப்பளித்து சித்தர் போன்றவர்களிடம் இருந்து சில நுட்பங்களை தெரிந்து கொள்வதில் பேரரசர் அக்பர் ஆர்வம் காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. இருந்தபோதிலும், 17-19 ஆம் நூற்றாண்டுகளில் யோகப் பயிற்சிகளை மேற்கொள்ளும் யோகிகள் அல்லது சித்தர்கள் என்று அழைக்கப்படுபவர்களை பரிகாசம் செய்வது மேல்குடி மற்றும் ஆளும் வர்க்கத்திடம் காணப்பட்டது. குறிப்பாக, அவுரங்கசீப் ஆட்சியின் போது அவரது ஆட்சியாளர்கள் யோகிகளைத் தண்டித்தனர். இருந்தபோதிலும், இது பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. சூபி துறவிகளுடன் அவுரங்கசீப் மிகவும் நெருக்கமாக இருந்தார் என்றும் மறைபொருள் பற்றிய ஆர்வம் அவருக்கு இருந்தது என்றும், சித்தர் அல்லது யோகிகளின் மடங்களுக்கு நிலம் போன்ற தானங்கள் செய்துள்ளார் என்றும்

பதிவுகள் காணப்படுகின்றன. ஆனபோதிலும், இக்காலத்தில் நாடோடிகளாக திரியும் யோகிகளும் சித்தர்களும் அவரவர் குடும்பங்களுக்கு அல்லது சொந்த ஊர்களுக்கும் திரும்பிச் செல்லும் கட்டாயம் ஏற்பட்டது. ஹடயோகம் மற்றும் தாந்திரிகத்தில் தீவிரமாக ஈடுபட்ட ஆதிநாத வம்சத்தைச் சார்ந்த நாகா மற்றும் அகோரி போன்றோர் இமயமலை அல்லது காடுகளில் மறைந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆங்கிலேய ஆட்சியின் போதும் இவர்கள் ஆபத்தானவர்கள், ஏமாற்றுக்காரர்கள், ஐயத்துக்கு உரியவர்கள் என்று முத்திரைக் குத்தப்பட்டனர். கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இவர்கள் கீழ்த்தட்டு சாதியினர் என்று வகைப்பாடு செய்யப்பட்டனர். இந்த நிலையில் பிராமணிய மரபுக்கு தாழ்ந்த நிலையில் சித்தர் மரபு அதிகார ரீதியாக அடையாளம் அளிக்கப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் சுவாமி விவேகானந்தர் ஹடயோகத்தை ராஜ யோகம் என்று பிரபலப்படுத்திய பிறகு யோகிகள் மற்றும் சித்தர்கள் பற்றிய பார்வை மாறத் தொடங்கியது. ஆன்மிகப் பயணத்தில் சித்தர்கள் உருவாக்கிய யோகநெறியை தனித்தன்மை வாய்ந்ததாக உலக அளவில் செல்வதற்கான ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியவர் என்று அவரைப் பற்றி மதிப்பிடலாம். அதுமட்டுமின்றி சித்தர்கள் மற்றும் யோகிகளுக்கு மதிப்பை மீட்டுத் தந்தவர் என்ற பெருமையும் அவரைச் சாரும். இந்த நிலையில், சீனா மற்றும் திபெத் பகுதியில் யோநெறியைக் கொண்டிருந்த பௌத்தர்கள் பொதுவுடைமை புரட்சியின் விளைவாக அவர்கள் துரத்தப்பட்டனர். அவர்களில் பலர் நேபாளம் மற்றும் இந்தியா, பர்மா மற்றும் அதன் வழியாக தாய்லாந்து போன்ற நாடுகளுக்குப் பெயரத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் திபெத்திய நூல்கள் பல மறைந்துவிட்டன. சித்தர் மரபுடன் இணைந்து வந்த யோகநெறி பல்வேறு மதம், சமூகம், அரசியல் ஆகியவற்றைக் கடந்து அனைவரும் ஏற்றுப் பயன்படுத்தும் நெறியாக வளர்ந்து வந்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், சித்தர்கள் தங்களுக்கென்று ஒரு மதத்தை நிறுவாமல் அனைத்து மதங்களின் ஆன்மிக சாரத்தைத் தாங்கியுள்ளனர் என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

தமிழ்ச் சித்தர் மரபு

தமிழ்ச் சித்தர் மரபு பற்றிய செய்திகளை பெரும்பாலும் திருமந்திரம், ஔவைக் குறள், ஞானத்தாழிசை, பெரிய ஞானக்கோவை, வள்ளலாரின் வசன பாகம் ஆகிய நூல்களைக் கொண்டு காண வேண்டியுள்ளது. இவை தவிர, அகத்தியர் மற்றும் போகர் பெயரில் பல நூல்களும், ஓலைச்சுவடிகளில் இருந்து பதிப்பித்த சித்த மருத்துவ நூல்கள் பல நமக்குக் கிடைக்கின்றன. வேத புராண காலத்தைச் சார்ந்த அகத்தியர் காலந்தொட்டு சித்தர் மரபை தடங்காண்பது தமிழ்நாட்டில் உள்ள வழக்கமாகும். மச்சேந்திரநாதர், கோரக்கநாதர் ஆகியோர் வடமொழியில் இயற்றிய நூல்களும் தமிழில் அவர்கள் பெயரில் அமைந்துள்ள சித்தர் பாடல்களும் ஒன்றா என்ற வினா எழுகிறது. இவற்றின் மூலச் சுவடி எங்கே, யார் முதலில் தொகுத்தனர் என்பது தெரியவில்லை. அச்சுப் பிரதி வடிவில் காணப்படுவதில் அவர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் நம்பத்தக்கவையாகத் தெரியவில்லை. இத்தகைய குறைபாடுகள் இருந்தபோதிலும் அத்தகைய நூல்கள் தரும் செய்திகளை மட்டும் இங்கு ஆராய்வோம்.

உபநிடதங்கள் காலந்தொட்டு எட்டாம் நூற்றாண்டு வரை சித்தர்களின் யோக நெறி பல்வேறு பரிமாணங்களில் வெளிப்பட்டுள்ளது. இவர்களின் மரபில் பல நடைமுறை உத்திகள் அடங்கியுள்ளன. ஆனால் சிலர் சிலவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து அந்தந்த காலத்தில் தங்கள் செயல்பாடுகளையும் உபதேசங்களையும் கொண்டிருந்தனர். பௌத்த மடாலய பிச்சுகளின் பங்கு இதில் அதிகமாகவே இருந்துள்ளது. மேலும், உடநிடதங்களின் பிரம்மம் என்ற கருத்து யோகநெறியில் சுத்தவெளி அல்லது சிவம் என்று ஏற்கப்பட்டது. சாங்கிய தத்துவத்தின் புருஷன்-பிரகிருதி என்பது சிவன்-சக்தி என்று உருவகப்படுத்தப்பட்டது. தாந்திரக சாத்திரங்கள் புத்தர் காலத்திலிருந்து செவிவழியாகக் கடத்தப்பட்ட செய்திகள் ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் முறைப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதன் வளர்ச்சி ஏறத்தாழ 18 ஆம் நூற்றாண்டுவரை தொடர்ந்துள்ளது. இவற்றில் கூறப்பட்ட வழிமுறைகள் சித்தர் மரபில் தொடர்ந்து உள்ளடக்கப்பட்டு வந்துள்ளன.

பெரும்பாலும் யோகிகளை சித்தர்கள் என்றும் அடையாளம் காணப்படும் வழக்கம் உள்ளதால், இவற்றின் செல்வாக்குப் பற்றிய காலநிர்ணயத்தை அறிவது கடினம். காலநிர்ணயம் பற்றி அறியமுடியாவிட்டாலும், புராணம் மற்றும் புகழுரைக் கதைகளைத் தவிர்த்து ஆராயும் நிலையில், 12 ஆம் நூற்றாண்டு வாக்கில் இயற்றப்பட்ட பெரியபுராணத்தில் திருமூலர் 63 நாயன்மார்களின் ஒருவராகக் குறிப்பிடப்பட்டும், அவர் இயற்றிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டும் உள்ளது. காலம் பற்றிய செய்திகளை சேக்கிழார் பதிவு செய்யவில்லை என்றபோதிலும், 12 ஆம் நூற்றாண்டு வரையிலான சித்தர்களின் யோகநெறி மற்றும் தாந்திரக வழிகளை திருமந்திரம் உள்ளடக்கியுள்ளது. இதன் உள்ளடக்கத்தில் ஏறத்தாழ சமஸ்கிருத்தத்தில் இயற்றப்பட்ட பல்வேறு யோக மற்றும் தாந்திரக சாத்திரகளின் பிரதிபலிப்புக் காணப்படுகிறது. சமஸ்கிருதம், பாலி அல்லது திபெத்திய மொழிகளில் உள்ள அச்சரம் எனும் மந்திர எழுத்துக்களின் ஒழுங்கமைவு தமிழில் காணப்படுவதை இந்த நூலில் காணலாம். ஏறத்தாழ இக்கால கட்டத்தை அடுத்து, சமஸ்கிருதத்தில் அமைந்த வால்மீகி ராமாயணயத்தைத் தழுவி கம்பராமாயணம் வந்து கொண்டிருந்தது என்பதையும் கவனிக்க வேண்டும்.

யோகநெறியில் காணப்படும் சில ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை இங்கு பார்க்கலாம். மனித இனத்தின் உடலமைப்பு ஒரே பண்பைக் கொண்டிருப்பதால், அதன் அடிப்படையில் அமைந்த யோநெறியிலும் ஒன்றுமை காணப்படுகிறது. சிவன்-சக்தி, குண்டலினி, சக்கரங்கள், நாடிகள், வாயுக்கள், தூல, சூக்கும, காரண உடல்கள், அந்தகரணங்கள் போன்ற கருத்துகள் யாவும் விளக்கப்படுவதிலும், ஆசனங்கள், முத்திரைகள், பிராணாயாமம், தியானம் போன்றவற்றை எடுத்துக் கூறுவதிலும் வேறுபாடுகள் காணப்படவில்லை. மதங்களுக்கு ஏற்ப தெய்வம், துதிகள், சடங்குகள் போன்றவற்றை வெகுசில சித்தர்கள் மட்டுமே பேசியுள்ளனர். தமிழ்நாட்டில் காணப்படும் மதம் சார்ந்த மடங்கள், ஆதினங்கள் போன்ற மரபுத் தொடர்ச்சி இவர்களுக்கு இல்லை. இருந்தபோதிலும், அவர்களின் இலக்கியம், சமாதிகள், ஆங்காங்கே அவர்களுக்காக எழுப்பப்பட்டுள்ள சிலை வழிபாடுகள்

வழக்கத்தில் உள்ளன. தமிழில் இயற்றப்பட்ட சித்தர் பாடல்களில் காணப்படும் பெண்கள் பற்றிய பார்வை பொதுவாக விமர்சனத்துக்கு உள்ளாயிற்று. தாம் முடிவான ஒன்றைப் பெற்றுவிட்டோம் என்றும், மற்றவர்களும் அவ்வாறே பெறமுடியும் என்பதையும் வலியுறுத்தும் போக்கு தமிழில் எழுதப்பட்டுள்ள சித்தர் பாடல்களில் குறிப்பாகக் காணப்படுகிறது. ஞானத்தைப் பெறுவதற்காக இலக்கியம் படைத்தார்களா, அல்லது ஞானம் பெற்ற பிறகு இலக்கியம் படைத்தார்களா என்பதைக் கண்டறிய இயலுமா என்ற வினா எழுகிறது. இதற்குக் காரணமாக அமைவது, பக்தி மரபில் சிலர் வேடந்தாங்கிய இறைவனுடன் உரையாடுவது போலவும் முடிவில் அனுடன் கலந்து மறைவது போலவும் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சித்தர் மரபில் ஞானத்தைக் கண்டு, பெற்று, உணர்ந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டு அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்ததாகத் தெரிகிறது. பக்தி இலக்கியத்தை கதைகளைக் கொண்டு நீட்டிக்க முடியும். சித்தர் இலக்கியத்தை அவ்வாறு செய்தால் அதுவே அவர்களுக்கு முரணாக அமைந்துவிடும். வேதங்கள் மற்றும் புராணங்களை ஆங்காங்கே கலந்து பக்தி இலக்கியம் பிரதிபலிப்பது போன்ற கருத்துகள் சித்தர் இலக்கியத்தில் பொதுவாகக் காணப்படுவதில்லை. வலுத்தவனைப் பணியச்செய்தது பக்தி மரபாகும். தாழ்ந்திருந்தவனை உயர்ந்தச் செய்தது சித்தர் மரபாகும். தமிழ்ச் சித்தர் மரபில் காணப்படும் மற்றொரு முக்கிய தத்துவம் வியப்புரிகுரியது மட்டுமின்றி மனித இனத்துக்கு மிகவும் தேவையானதாகும். ”பிஞ்சிலே பழுக்கக் கூடாது, பழுத்தால் அழுகக் கூடாது” என்பது தாந்திரகத்தையும் மருத்துவத்தையும் உள்ளடக்கிய ஞானமாகும். இதற்கான விளக்கத்தைப் பிறகு பார்க்கலாம்.

மருத்துவ மரபு

மரபு சார்ந்த மருத்துவத்தில் தொடர்ந்து சீனா முன்னிலையில் உள்ளது. அடுத்த நிலையில் ஆயுர்வேதமும் சித்த மருத்துவமும் இந்தியாவில் முன்னிலைப் பெற்றுள்ளன. ஆப்பிரிக்க நாடுகளில் இன்றும் பழங்குடி மரபு மருத்துவ முறைகள் பரவலாகக் காணப்படுகின்றன. ரஷ்யா மற்றும் வளைகுடா நாடுகளிலும் மரபு

சார்ந்த மருத்துவம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டை தாயகமாகக் கொண்ட சித்த மருத்துவத்தின் தோற்றம் புராண காலத்துடன் தொடர்பு படுத்தப்படுகிறது. இந்த முறையை சிவன் பார்வதிக்கு உபதேசித்து அதன் பிறகு நந்தி, ஒன்பது தேவர்கள் ஆகியோர் வழியில் அகத்தியரால் தமிழ் நாட்டுக்கு வந்ததாக ஒரு கதை உண்டு. தற்போது இந்த மருத்துவம் நவீனமயமாக்கப்பட்டு அரசாங்கம் முறைப்படுத்தி உள்ளது. இருந்த போதிலும் கிராமப்புறங்களில் பலவகையான மரபு சிகிச்சை முறைகளும், மூலிகைகளும் பயன்பாட்டில் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் யோகநெறியில் ஈடுபடுவர்களுக்கு உடலை தூய்மைப்படுத்தி உயிரோட்டத்தை சீராக்கி ஆன்மிக இலக்கை அடைவதற்கு பயன்பட்டபோதிலும், காலப்போக்கில் நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் பல உத்திகள் கண்டறியப்பட்டன. வேறுவகையாகச் சொன்னால், அக்காலத்தில், சித்தர் அளிக்கும் சிகிச்சைகள் யாவும் ஒருவர் தன்னையறிந்து உய்வதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தது. நோய்க்கான காரணங்களில் ஒன்றாக ஊழ்வினையை அவர்கள் தொடர்புபடுத்தி அதை நீக்க யோகமுறை சிகிச்சையை அளித்தனர்.

ஊழ்வினையும் ஆள்வினையும்

சித்தர்கள் அறிவுறுத்தும் இந்த இரண்டு வகை இயக்கங்களைப் பார்ப்பதற்கு முன்பு திருக்குறள் கூறுவதைப் பார்க்கலாம்.

> ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும். (380)

> ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
> தாழாது உஞற்று பவர். (620)

உடலில் இரண்டு வகையான இயக்கங்கள் தொடர்ந்து நடக்கின்றன. நம் கட்டுப்பாட்டில் இல்லாத இயக்கமாகவும் நாம் கட்டுப்படுத்தும் இயக்கமாகவும் அவை அமைந்துள்ளன. முதல் வகையை விதி அல்லது ஓர் ஒழுங்கு முறையில் இயங்குவது என்பதை உணரலாம். இரண்டாவது வகையை நமது சுதந்திரம், விருப்பு வெறுப்பு ஆகியவற்றைக் கொண்டு இயக்கலாம். இந்த இரண்டுக்கும் இடையே மூன்றாவதாக ஓர் இயக்கம் இருக்கிறது. அதாவது, நம் கட்டுப்பாட்டைக் கடந்தும் நம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டும் அந்த இயக்கம் நடக்கிறது. அது வாசி, மூச்சு அல்லது பிராண ஓட்டம் என்று அழைக்கப்படுகிறது. நாள் முழுதும் நமது மூன்று உணர்வு நிலைகளிலும் இந்த மூச்சோட்டம் தொடர்ந்து சுழல்கிறது. விழிப்பு நிலையில் நாம் அதை நீட்டிக் குறுக்கி, சிலநேரம் அடக்க முடியும். அதை பிராணாயாமம் என்கிறோம். கனவிலும் தூக்கத்திலும், நம்மை மறந்த நிலையிலும் மூச்சு இயங்குகிறது. எனவே உடல், உயிர், மூச்சு ஆகியவை விதியும் நமது சுதந்திரமும் இணைந்த ஓர் இயக்கமாக அமைகிறது. வேறுவகையில் சொன்னால், தூல உடலுக்கு விதியும், சூட்சும உடலுக்கு சுதந்திரமும், இரண்டும் கலந்த இயக்கத்தை மூச்சும் கொண்டுள்ளன. உடலுக்குண்டான விதியின் பரப்பைக் குறைத்து சுதந்திரத்தின் பரப்பை அதிகரிக்கும் முயற்சியாக சித்தர்கள் யோகநெறி மேற்கொண்டனர். எனவே நிறைமொழி மாந்தர் என்பவர்கள் ஆள்வினை கொண்டவர்கள் என்று பொருள் கொள்ளலாம். யோநெறியை மேற்கொள்பவர்களும் இதனுள் அடங்குவர்.

விமர்சன அறிவு

சித்தர் மரபில் ஒரு முக்கிய வெளிப்பாடாகக் காணப்படுவது அவர்கள் மேற்கொண்ட விமர்சன முறையாகும். அவர்களின் தாக்குதல் மிக நீண்டதாகக் காணப்படுகிறது. தத்துவப் பள்ளிகளில் காணப்படும் தர்க்கவியல் விவாதங்களைக் காட்டிலும் இவர்களின் விமர்சன முறை கடுமையாகக் காணப்படுகிறது. மேலான ஒன்றை அடைந்து அச்சமற்ற நிலையில் உருவான விமர்சனமாக அவை தோற்றம் கொண்டுள்ளன. முதலில், மனிதனின் அறியாமை, மடமை, கற்பனை,

மற்றும் ஆசைகளை அவர்கள் விமர்சிக்கின்றனர். மனிதர்களின் அறிவை மழுங்கடிக்கும் கருத்துகள் மற்றும் சடங்குகளை எதிர்க்கின்றனர். மதத்தின் பெயரால் மூடநம்பிக்கைகளை வளர்த்து ஒரு குறிப்பிட்ட வர்க்கம் மற்ற வர்க்கங்களை மயக்கி தங்கள் விருப்பத்திற்கேற்ப அவர்களைப் பயன்படுத்தும் செயல்பாடுகளைத் தீவிரமாகத் தாக்கியுள்ளனர்.

வேதகால முனிவர் மற்றும் சாதுக்கள், சமணத் துறவிகள், ஆசீவகத் துறவிகள் ஆகியோரின் உடலை வருத்தும் கடுந்தவங்கள் ஞானத்தை அடையத் தேவையில்லை என்று சித்தர்கள் கூறுகின்றனர். உடல் நலத்தைப் பேணி மனத்தில் சுதந்திரத்தைக் கொள்ளும் வழிவகைகளை அவர்கள் வலியுறுத்தியதாகத் தெரிகிறது. கடுந்தவங்களைப் பின்பற்றுபவர்களை ஏற்கெனவே பகவத் கீதை விமர்சித்துள்ளது. அறநெறிகளை உபதேசப்பவர்களும் கடுந்தவங்களை வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. மனித உடலை எந்தவகையிலும் வருத்தி அதன் மூலம் ஞானத்தை அடைய சித்தர்கள் சொன்னதாகத் தெரியவில்லை. உடல் இயற்கையாகவே இன்பத்தை அளிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளதை அவர்கள் எடுத்துக் காட்டி நமது அறியாமையால் அதை இழந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கை விடுக்கின்றனர். இருந்தபோதிலும், காமத்தைக் கட்டுப்படுத்தச் சொல்கின்றனர். இதற்காக தாந்திரிக முறையை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். தன்னையும் வருத்திக்கொள்ளாமல் மற்றவர்களையும் வருத்தாமல் இன்பமடையும் வழி ஏதாவது உண்டா என்ற வினாவுக்கு இன்று வரை அவர்களின் மரபுதான் பதிலளித்துள்ளது. தாந்திரிகத்தில் அவர்கள் பயன்படுத்தும் சடங்குகள் யாவும் இந்த நோக்கத்தின் அடிப்படையைக் கொண்டிருப்பதைக் காணமுடியும். இதன் மூலம் தொடக்கத்தில் தள்ளி வைக்கப்பட்ட பெண்ணினம் இவர்களின் யோகநெறியின் ஒரு பகுதியாக ஏற்கப்பட்டனர்.

சித்தர்கள் காட்டியுள்ள விமர்சன முறையைப் பயன்படுத்தி அவர்களின் மரபை நாம் மதிப்பீடு செய்ய முடியுமா என்று பார்க்கலாம். அதாவது, அவர்கள்

ஏற்கெனவே மற்றவர்களின் விமர்சனங்களுக்கு உட்பட்டிருப்பர். மதங்கள் ஒட்டு மொத்தமாக, இசுலாமியத்தைத் தவிர்த்து, இலக்கியம், கலை, ஓவியம், சிற்பம், கோயில் கட்டடக் கலை, சில அறிவியல் ஆய்வுகள் ஆகியவற்றை வளர்த்து வந்துள்ளன. அன்றாட வாழ்வியல் நோக்கில் இவற்றின் தேவைகளைப் புறக்கணிக்க முடியாது. மேலும், இறுதியான ஒரு விளைவுக்கு தெய்வம் வேண்டுமா அல்லது அன்றாட வாழ்க்கையை நகர்த்துவதற்கு ஒவ்வொரு கணமும் தெய்வம் தேவையா என்று அடிப்படையான ஒரு வினா முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வகையில் சித்தர்களின் இறைநெறி பற்றிய பொதுவான கருத்தும் புரிதலும் மக்களிடையே எவ்வாறு காணப்படுகின்றன என்பதை ஆராய வேண்டும். வரையறைக்கு உட்படுத்த முடியாவிட்டாலும் தெய்வம் என்ற சொல் எந்தந்த வகையில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்பதை இங்கு சற்று சிந்திக்கலாம். அனைத்துக்கும் அடிப்படையாக அமைந்தவன், எங்கும் நிரம்பியிருப்பவன், அந்தர்யாமியாக இருப்பவன், உருவமற்றவன், அனைத்து உருவங்களையும் கொண்டவன், உயிர்களிடத்திலும் இருப்பவன் போன்ற வகைகளில் இறைவன் அடையாளம் கொள்ளப்படுகிறான். மதங்கள் இவற்றில் சிலவற்றை ஏற்று சிலவற்றை புறக்கணிக்கின்றன. பெரும்பாலான மதங்கள் இறைவன் மனிதர் உடலுக்குள் இல்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றன. யோகநெறிக்கு உட்பட்ட சிலர் சகஸ்ரார சக்கரத்தை துவாதச வெளியில் இருப்பதாகக் கூறுகின்றனர். அதாவது ஆயிரம் இதழ் தாமரை தலை உச்சிக்கு 12 அங்குலத்துக்கு மேலே கவிழ்திருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். இதன் உள்ளார்ந்த பொருள், உடலைவிட்டு அவன் சற்று உயரத்தில் உள்ளான் என்பதாகும். உடலில் அழுக்கும் ஊழ்வினையும் இருப்பதால் அவன் சற்று புறத்தில் நிற்கிறான் என்று சிலர் பொருள் கொள்கின்றனர். எனவே அவன் பொதுவாக நிலைத்து நம்மைத் தாங்குகிறான். ஆகவே, உடலுக்குள் அவனைக் காண முடியாது என்று நம்பப்படுகிறது. அதாவது, புறத்தில் நாம் கண்களால் காணக்கூடிய வகையில் தோற்றமளிப்பான் என்று கூறப்படுகிறது. சில மதங்கள், படைப்பின் ஆதாரம் வெற்றிடமே. எனவே மனிதர்களுக்கு ஏற்ற இறுதி இலக்கு வெற்றிடத்தை நோக்கிச் செல்வதுதான் என்று கருதுகின்றன. ஒவ்வொரு மனிதருக்குள்ளும்

தெய்வம் உள்ளது என்ற கருத்தை நடைமுறையில் மக்கள் எந்த அளவுக்கு ஏற்றுள்ளனர் என்ற வினா தொடர்ந்து எழுப்பப்படுகிறது. அவ்வாறு ஒருவேளை தாக்கம் ஏற்பட்டிருந்தால், உலகில் வர்க்கமுரண், வன்முறை, போர், பிறப்பைக் கொண்டு மனிதரை இழிவுபடுத்துதல் போன்றவை தொடர்ந்து நிலவுவது இயல்பாகவே பலவீனமாகி இருக்கலாம். இதற்கு மாறாக, நடைமுறையில், மற்றவர்களைக் காட்டிலும் தான் ஒருபடி உயர்ந்துள்ளேன் என்றே எண்ணமே ஒருவருக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த முனைப்பே பல செயல்பாடுகளுக்கு தொடர்ந்து இட்டுச் செல்கிறது.

இதே போன்று சித்தர்கள் இயற்றியதாக நம்பப்படும் மருத்துவ இலக்கியம் பற்றியும் நாம் விமர்சனத்தை முன்வைக்கலாம். நோய்களுக்கான சிகிச்சை அவர்கள் தங்கள் பெற்றிருக்கும் தனிப்பட்ட சக்திகளின் அடிப்படையில் அமைந்தது என்று கொள்ளலாம். அவ்வாறான வழக்கத்தில் முக்குற்றங்களை சரிசெய்ய மூன்று மூலிகைகளும் மூன்று சிகிச்சை முறைகளும் போதுமானதாக இருந்திருக்க வேண்டும். மூன்று வண்ணங்கள் சேர்த்து பல்லாயிரம் வண்ணங்களாக மனிதர்கள் தோற்றுவிக்கின்றனர். ஏழு சுரங்களைக் கொண்டு ஏழாயிரம் இசைகளை உருவாக்குகின்றனர். சில எண்களையும் எழுத்துக்களையும் கொண்டு பலகோடி சொற்களையும் சிந்தனைகளையும் அமைக்கின்றனர். மூவாயிரம் மூலிகைகளைக் கொண்டு மூவாயிரம் சிகிச்சை முறைகள் சித்தர் மரபுக்கு உட்பட்டதா என்ற வினா எழலாம். மூன்று கருத்துகளைச் சொல்ல மூவாயிரம் ஆண்டு வாழ்ந்து மூவாரம் பாடல்களை திருமூலர் இயற்றியதன் முக்கியத்துவம் என்ன என்பதை நாம் புரிந்துகொள்வது கடினமே. யோகநெறியில் நில், வாசியைக் கொள், இறைவனைக் காண் என்ற மூன்று மந்திரங்களைக் கொண்டது திருமந்திரமாக இருந்தபோதிலும் அதற்கு மூவாயிரம் விளக்கம் தேவைப்படுகிறதா?

அன்றாட வாழ்வியலும் சித்தர் மரபும்

தற்கால ஆய்வுநெறிகளில் அன்றாட வாழ்வியல் என்ற கருத்து பயனுள்ளதாகத் தோன்றுகிறது. இதன் வரையறை இடம் சார்ந்து வேறுபட்டாலும் மனித இனத்தின் அடிப்படையான சில உணர்வுகளைப் பிரதிபலித்து குறிப்பிட்ட ஒரு மரபின் தற்கால மதிப்புகளை அல்லது பயன்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கு உதவும். அன்றாட வாழ்வியலைக் கட்டமைப்பதில் மொழியும் பண்பாடும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் சார்ந்தும் அமைகின்றன. அன்றாட வாழ்க்கையில் கருத்தியல்களின் செயல்பாடு பரவலாகக் காணப்படுவதில்லை. பெரும்பாலும் அன்றையத் தேவைகள் மற்றும் விருப்பங்கள் சார்ந்தும், முன்னுள்ள பல்வேறு நடவடிக்கைகளில் தேர்வு செய்யும் சுதந்திரத்தைக் கொண்டும் அன்றாட வாழ்வியல் கட்டமைக்கப்படுகிறது.

மரபுகளையும் சாத்திரங்களையும் தற்காலிமாக ஒரங்கட்டிவிட்டு அன்றாட வாழ்க்கையில் மனிதருக்கு இறைவன் என்ற கருத்து எவ்வகையில் தேவைப்படுகிறது என்பதைப் பார்ப்போம். வாழ்க்கையை நகர்த்துவதற்கு புலனாகாத சக்தியின் உதவியை பல்வேறு வழிகளில் மனிதர்கள் வேண்டுகின்றனர். தொடக்ககால மனிதர் முதல் இன்று வரை இந்த எதிர்பார்ப்பு தொடர்கிறது. திருக்குறள்

அன்றாட வாழ்வியலின் நோக்கில், வீடுபேறு என்பது இறுதியில் அமைந்தது. அதற்கு முன்னதாக பல்வேறு கடமைகளை மனிதர் நிறைவேற்றுவதற்கு அத்தகைய புலனாகாத சக்தியின் உதவி தேவைப்படுகிறது. தங்கள் முயற்சிகளால் நிறைவேறாத நிகழ்வுகள் அதிகரிக்கும் போது இதன் தேவை மேலும் கூடுகிறது. முயற்சிகள் இருந்தபோதிலும், அன்றாட வாழ்க்கையில் ஒருவர் எங்கெங்கே தோற்றுவிட்டதாக உணர்கிறார் என்பதை இங்கே ஆராய வேண்டும். நல்வாய்ப்பு இல்லை என்பதை நம்புகின்றனர். அந்த நல்வாய்ப்பை அளிப்பது அந்த புலனாகாத சக்தி என்பதையும் நம்புகின்றனர். இதையெல்லாம் நாங்கள் நம்புவதில்லை என்று வெளியில் பேசுபவர்கள் மனத்தின் அடித்தளத்திலும் இத்தகைய சிந்தனை ஓடிக்கொண்டிருக்கலாம். இந்த இடத்தில் ஆத்திகம் மற்றும் நாத்திகம் பற்றிய

கோட்பாடுகளை ஆராய்வது அவசியம். இறைவன் என்ற ஒருவரைக் கண்டறியவில்லை என்பதால் நாத்திகர்கள் அவ்வகையாக ஒருவர் இல்லை என்று நம்புகின்றனர். இருந்தபோதிலும் ஒரு தேடுதல் அவர்களுக்குள் தொடர்ந்து இருக்கும். மாறாக, ஆத்திகர் என்போர் இறைவன் எனும் ஒருவர் உண்டு என்பதைக் கண்டறிந்த பிறகா கூறுகின்றனர்? வினா எழுப்பினால் பழைய சாத்திரங்களையும் கதைகளையும் எடுத்துக் காட்டாகக் கூறுவர். எனவே நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களின் கருத்து அமைந்துள்ளன. அவர்களுக்கு நம்பிக்கையே போதுமானது. தவம், யோகம் போன்றவை அவர்களுக்குத் தேவையில்லை. எளிமையான வழிபாடு போதுமானது.

ஆன்மிக மரபில் சலுகைகள் அளிப்பது பரவலாக இருந்துள்ளது. அதாவது ஒரு காலத்தில் மிகக் கடினமாக இருந்த தவம் போன்றவை எளிமையாக்கப்பட்டன. இதற்கு பல எடுத்துக்காட்டுகள் கூறமுடியும் என்றாலும், குறிப்பாக, புத்தர் மற்றும் கிருஷ்ணர் இதில் முன்னணியில் உள்ளனர். தம்மிடம் புகலிடம் நாடி வந்தவர்களை கைவிடக் கூடாது என்ற உறுதி அவர்களிடம் இருந்துள்ளது. மனத்தை வசப்படுத்த முடியாத ஒரு இளைஞன் அதற்கான வழியை புத்தரிடம் கேட்கிறான். அதற்கு அவர் பல்வேறு கட்டங்களில் அந்த இளைஞனின் பலவீனத்தை ஆற்றுப்படுத்தும் வகையில் உபதேசிக்கிறார். ஆசையின் பொருட்டு மனம் வீழ்ந்து கொண்டே இருக்கும் நிலையில், அதையெல்லாம் ஏற்று அடுத்தடுத்து அவனுக்கு உபதேசிப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பகவத் கீதையில் கிருஷ்ணர் பல்வேறு தத்துவங்களையும் யோகநெறிகளையும் அர்ச்சுணனுக்கு உபதேசிக்கிறார். அனைத்தையும் கேட்ட பிறகும் மயக்கம், குழப்பம், தயக்கம் ஆகியவற்றிலிருந்து அவன் விடுபட முடியவில்லை. இதை அறிந்த கிருஷ்ணர் இறுதியாக தன்னை நம்பி சரணடைந்து விடு, நான் உன்பொருட்டு அனைத்தையும் செய்விக்கிறேன் என்று உறுதியளிப்பதாக அந்த உபதேசம் அமைந்துள்ளது. இந்தக் கதையில், இறைவன் மனிதனோடு மனிதனாக தொடர்ந்து அர்ச்சுணனுடன் வருகிறான். அந்தர்யாமியாவோ, இறுதிக்கட்டத்தில் முக்தியளிக்க வருபவனாகவோ காட்டப்படவில்லை. பெரும்பான்மையான

மக்களுக்கு இத்தகைய கதையே போதுமானது. அந்த நம்பிக்கையே அன்றாட வாழ்வியலில் வசதியாகக் காணப்படுகிறது.

பெரும்பான்மையான மக்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நம்பிக்கையும் எளிமையான வழிபாடும் போதுமானது என்று முடிவு செய்துள்ளதால் சித்தர் மரபுக்கு தற்போதுள்ள பயன் அல்லது மதிப்பு என்ன என்பதை விவாதிப்பது மரபு மீறிய செயலாகக்கூடத் தோன்றலாம். குறிப்பாக இந்தியாவில் பலதெய்வ நம்பிக்கை முன்பைக் காட்டிலும் தற்போது உறுதியாகிவிட்டது. அறிவியல் ரீதியான விளக்கம் அளிக்கும் குருமார்களும் மடாதிபதிகளும் அதிகரித்துவிட்டனர். கருத்து சொல்லாத களமே இல்லை என்று ஊடகங்கள் உறுதிபடுத்தியுள்ளன. மக்கள் தாராளமாக தேர்வு செய்யும் சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர். நூல்களும் கருத்துகளும் அபரிமிதமாகக் காணப்படுகின்றன. இத்தகைய நிலையில், சித்தர் மரபுக்கு ஏற்ப நாம் அன்றாட வாழ்க்கையில் அனுபவரீதியாக எதையாவது பெற்று வருகிறோமா அல்லது பெற்றிருந்தும் அதைப் பற்றி அறியாமையில் உள்ளோமா என்பது போன்ற சில வினாக்களுக்கு இங்கு விடை காண முயலுவோம்.

இதை ஆராய்வதற்கு முன்பாக சித்தர் மரபு கடந்து வந்த பாதையை மீண்டும் திரும்பிப் பார்ப்போம். முதற்கட்டத்தில், மகாவாக்கியங்களை அனுபவரீதியாக அடையும் உத்திகளைக் கொண்ட ஞானநெறியை சித்தர் மரபு காட்டியது. இத்தகைய அனுபவம் உண்மையில் அகத்திலிருந்தா அல்லது புறத்திலிருந்தா என்ற மயக்கம் தொடர்ந்து வந்த நிலையில் தத்துவங்கள் பெருகி புதிய விளக்கங்களும் விவாதங்களும் வளர்ந்தபோது சித்தர் மரபு அடுத்தக் கட்டத்துக்கு சென்று அகநிலை அனுபவத்தை வலியுறுத்தச் செய்தது. இரண்டாவது கட்டத்தில், அட்டாங்க யோகம், ஹடயோகம், தந்திரம், குண்டலனி யோகம், ஆசனங்கள், முத்திரைகள், தியானம் என்று உத்திகள் விரிவுபடுத்தப்பட்டன. பக்திமார்க்கத்தில் உள்ள சில வழக்கங்கள் எதிர்க்கப்பட்டு மருத்துவ முறைகளும் இக்காலத்தில் வளர்ந்தன. இடைக்காலம் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சித்தர் மரபு

கேலிக்கு உள்ளாகி யோகிகள் ஒதுங்கி வாழ வேண்டியிருந்தது. மூன்றாவது கட்டமான நவீன காலத்தில் அனைத்து மதங்களும் சித்தர் மரபில் காணப்படும் யோக உத்திகளைத் தாராளமாகப் பயன்படுத்தும் போக்கு காணப்படுகிறது. அரசும் சித்தர் மரபை ஆதரிக்கும் நிலைக்கு வந்துள்ளது. கல்வி நிலையங்களில் பாடத்திட்டத்திலும் ஆராய்ச்சியிலும் சித்தர் மரபு குறிப்பிட்ட இடத்தை தற்போது பெற்றுள்ளது. சமூக அளவில் அவர்கள் வழிபாட்டுக்கு உரியவர்களாக, அவர்கள் சமாதியடைந்த தலங்கள் மக்களை ஈர்க்கும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளன. அன்றாட வாழ்க்கைக்கு பயன்படும் வகையிலும் பெரும்பான்மையான மக்களுக்கு சென்றடையும் வகையிலும் யோக நெறி எளிமையாக்கப்பட்டும் புதிய உத்திகள் சேர்க்கப்பட்டும் தற்போது வளர்ந்து வருகிறது.

சித்தர்கள் காட்டும் அனுபவ அறிவு

மேற்கண்ட கருத்துகள் பற்றிய அனுபவங்களை அன்றாட வாழ்வியலில் மூன்று வகைகளில் ஒருவர் எவ்வாறு பெறுகிறார் அல்லது பெறவேண்டும் அல்லது பெற்றிருந்தும் அறியாமல் இருக்கிறார் என்பதை இந்தப் பகுதியில் காணலாம்.

1 தூல, சூக்கும, காரண உடல்கள் பற்றிய அனுபவ அறிவு
2 விழிப்பு, கனவு, தூக்கம் பற்றிய அனுபவ அறிவு
3 அகநிலை மற்றும் புறநிலை தோற்றம் பற்றிய அனுபவங்கள்.

வழக்கமாக இத்தகைய அனுபவங்கள் எழுதி வைக்கப்படுவதில்லை. பேச்சு வழக்கில் தொடரச் செய்வது மரபாக உள்ளது. இந்த இடத்தில் அறிவியலுக்கும் ஆன்மிக மரபுக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. அறிவியல் பிரிவுகளைப் பொருத்தவரை புதியதாக ஒன்றை ஒருவர் கண்டறிந்து சான்றுடன் உறுதிபடுத்தும் நிலையில் முந்தைய கோட்பாடுகள் தேவையற்று விடுகின்றன. அவ்வாறு ஒன்றை உறுதிபடுத்திய நிலையில் மீண்டும் அதை பரிசோதனை செய்து உறுதிபடுத்தும் தேவையும்

இருப்பதில்லை. ஆன்மிக மரபில் சொல்லப்பட்ட கருத்துகள் மனிதரின் அனுபவத்துடன் தொடர்ந்து தொடர்புகொண்டிருக்க வேண்டும். ஒருவர் மட்டுமே அனுபவமாகப் பெறுவதுடன் நிறைவடையாது. அவ்வாறு இருந்தால் அது வெறும் கருத்துகளாக மட்டுமே தொடரும். அவ்வாறு உண்மைக்குப் புறம்பான கருத்துகள் பலவும் தொடர்ந்து காணப்படும். ஒவ்வொருவரும் சுவாசிப்பது போல, ஒவ்வொருவரும் உணவு உட்கொள்வது போல, ஒவ்வொருவரும் அத்தகைய அனுபவத்தைப் பெறாத வரையில் அறியாமை அல்லது நம்பிக்கை அடிப்படையில் தொடர்ந்து வாழ்வது என்ற நிலை சித்தர் மரபுக்குப் புறம்பானது. எனவே மேற்குறிப்பிட்ட மூன்று அனுபவங்களைப் பெற அல்லது பெற்றதை உணர்ந்திருப்பது மனிதரின் கடமையாக அமைந்துள்ளது.

உலகாயதம் பற்றிய கருதுகோளை இங்கு ஆராய்வது மிகவும் அவசியம். அனைத்துக்கும் அடைப்படை பொருளே அன்றி அரூபமான அசைவோ அல்லது அறிவோ அல்ல என்று உலகாயதம் எனும் பொருள்முதல் வாதம் முன்னிறுத்துகிறது. பிரம்மம் என்பது நேரடியாக ஒருவர் தன் புலன்களால் காணாதவரை அதை நம்பமுடியாது என்று தேவிபிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார். அவ்வாறு உண்மையில் காட்சிகள் தோன்றினாலும் அவற்றை மனநோய் என்று குறிப்பிடுவதும் உண்டு. புராணங்களைத் தவிர்த்து, வரலாற்றுப் பின்புலத்தில் அமைந்துள்ள சில பக்தி இலக்கியங்களில் மனித உருவத்தில் இறைவன் மனிதர்களுடன் உறவாடியதாகக் காணப்படுகின்றன. இறைவன் தனது உருவத்தில்தான் மனிதனைப் படைத்துள்ளான் என்று மேற்கத்திய ஆன்மிக சிந்தனைகள் பெரும்பாலும் குறிப்பிடுகின்றன. காரணம், அனுபவங்கள் பெரும்பாலும் மொழி மற்றும் பண்பாடு சார்ந்து அமைவதால் மனித உருவம் கொண்ட இறைவன் அத்தகைய நம்பிக்கை அல்லது அனுபவம் கொண்டவர்களுக்கு குழப்பம் அடையாத நிலையை ஏற்படுத்தலாம். புராணங்களில் காணப்படும் விலங்கு வடிவ தெய்வங்களும் நடைமுறைக்குப் பொருந்தாத உடல் அவயங்களைக் கொண்ட மனித உருவங்களும் மனிதர்களுக்கு குழப்பத்தையே

ஏற்படுத்தும். அந்நிலையில் குருமார்கள் மீது அவர்கள் அதிக ஈடுபாடு கொள்வது இயல்பாக அமைந்துவிடுகிறது.

நனவிலும் கனவிலும் தெய்வங்களின் தோற்றங்களும் உபதேசங்களும் பெற்றதாக சிலர் தற்காலத்தில் பதிவு செய்துள்ளனர். இவையாவும் மொழி மற்றும் பண்பாடு சார்ந்து அமைந்துள்ளன. அதாவது, நனவு நிலையில் புறத்தில் நிகழ்ந்துள்ளன. கனவில் நிகழ்ந்தவை யாவும் அகம் அல்லது புறம் என்று உறுதியாகக் கூறமுடியாத நிலையைக் காட்டுகின்றன. மேலும் சிலர் தமக்குள் உணர்வது அல்லது ஒளியால் சூழப்படுவது போன்ற அனுபவங்களைப் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய அனுபவங்களுக்குப் பிறகு அவர்களின் சிந்தனை ஓட்டத்தில் அல்லது செயல்பாடுகளில் மட்டுமே சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால் அத்தகைய அனுபவங்கள் பெற்ற பிறகு சித்திகள் பெற்றதாக எழுதப்படும் அல்லது காட்டப்படும் செயல்கள் யாவும் உள்நோக்கம் கொண்டதாக இருக்கலாம். காரணம், தூல உடலின் ஒவ்வொரு நுண்ணிய உயிரணும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய அனைத்தையும் செய்து வருகின்றன. அதாவது, அது தனது உடல் சார்ந்த எல்லைக்கு உட்பட்டு செயலாற்றுகிறது. இங்கு உயிர்களில் வேறுபாடு இல்லை. காலையில் தூங்கி எழுந்தவுடன் ஒரு நாய் அல்லது பூனை சூரிய நமஸ்காரம் செய்வது போலதான் தனது உடலை நீட்டி வளைத்து உற்சாகப்படுத்திக் கொள்கிறது. சாத்திரங்களோ குருமார்களோ அதற்குத் தேவையில்லை. வேங்கையிடமிருந்து தப்பித்து ஓடும் ஒரு மான் தனது உடலை எப்படியெல்லாம் வளைத்து ஓடுகிறது என்பதைக் கவனித்தால் நாம் கண்டுபிடித்த ஆசனங்களை மிஞ்சி அதன் செயல்பாடு இருப்பதைக் காண முடியும். பாம்பு அல்லது மீன் போன்றவைகளின் அழகான அசைவும், பருந்தின் வட்டமிடும் போக்கும் இறையைக் கவ்வ மேலிருந்து கீழிறங்கும் பருந்தின் துல்லியமான வீச்சும் நாம் பயன்படுத்தும் நவீனக் கருவிகளை விஞ்சி நிற்கும். ஓர் அனுபவத்துக்குப் பிறகு ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி இருப்பதை தாவோ மற்றும் ஜென் வழிமுறையில் அனுபவம் பெற்றவர்கள் நடுவில் வெகுவாக உள்ளதாகக் கூறப்படுகிறது. அதாவது, மேலான அனுபவத்தைப் பெற்று ஒரு சமானியனாக

அன்றாட வாழ்க்கையை நகர்த்துதற்கு இணையாக ஒன்றும் இல்லை. கவிஞர் ஒருவர் தனது எண்ணத்தை பின்வரும் வகையில் வெளிப்படுத்தியதாக எப்பொழுதோ படித்த நினைவு. “அவன் குப்பையை அள்ளுவதும் இவன் கவிதை எழுதுவதும் செயலில் ஒன்றுதான். கவிதை எழுதுவதைக் காட்டிலும் குப்பை அள்ளுவது மேலானது.” காரணம், தடம் பதிக்காமல் அவன் சென்றுவிடுகிறான். இவன் குப்பைகளைக் கொட்டிச் செல்கிறான் என்று தாவோ எண்ணுகிறது. ஆனால் சித்தர் மரபு தற்போது புதிய திசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இதைப் பற்றி தற்போது விவாதிப்பதைக் காட்டிலும் மேலான அனுபவத்தைப் பெற்ற பிறகு இதை வாசிக்கும் தருணத்தில் உள்ளார்ந்த பொருள் விளங்கலாம்.

சித்தர் மரபில் புதிய வளர்ச்சிகள்

அன்றாட வாழ்வியல் சார்ந்து யோகநெறியின் பயன்பாடு பரவலாகப்பட்டதைத் தொடர்ந்து பக்திநெறியின் ஊடே சித்தர் மரபைக் கொண்டு செல்லும் வளர்ச்சிகளும் தற்காலத்தில் காணப்படுகின்றன. இறந்தவர்களுக்கு நினைவிடங்கள் அமைத்து அவற்றுக்கு மரியாதை செலுத்துவது தமிழரின் மரபாக தொடக்ககாலம் முதல் இருந்து வந்துள்ளது. வீரக்கல் வழிபாட்டில் மறைந்த மனிதர்களை தெய்வமாகக் கருதி வழிபாடு செய்யப்படும் வழக்கம் உண்டு. குடும்பங்களில் பித்ருக்களை வழிபாடு தொடர்கிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் முறையே சைவ மற்றும் வைணவ கோயில்களில் சிலைவடிவத்தில் வழிபாடு செய்வது தொடர்கிறது. இன்று பரவலாக பதினெண் சித்தர்களின் சீவ சமாதி என்ற ஒரு கருத்து பரவலாக உருவாக்கப்பட்டு அவை வழிபடும் இடங்களாக மாற்றப்பட்டுள்ளன. கோயிலுக்குச் செல்வதால் கிடைக்கும் பலன்கள் இத்தகைய சீவ சமாதிகளிலும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. இத்தகைய வளர்ச்சிகளில், இசுலாமியத்திலிருந்த வளர்ந்துள்ள சூபி தத்துவம் சித்தர் மரபில் உள்ளடங்கிய யோகநெறியை பிரதிபலிக்கிறது. சூபி துறவிகள் அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் வழிபாட்டுக்கு உரியனவாக அமைந்துள்ளன. தர்க்கா எனும் இடங்கள் இசுலாமிய மதத்தைச் சார்ந்தவர்களின் வழிபாட்டு இடமாக

இருந்தபோதிலும் பிற மதங்களைச் சார்ந்தவர்களும் அந்த இடங்களுக்கு செல்வதற்கு தடையில்லை. வழிபாட்டுத் தலங்களில் பிரார்த்தனைகளுடன் சடங்குகளும் பொதுவாகக் காணப்படுகின்றன. புதைவிடங்கள் அல்லது நினைவிடங்கள் மரியாதை செலுத்தும் நிலையிலிருந்து பிரார்த்தனை அல்லது தியானம் செய்யும் இடங்களாக மாறியுள்ளன. தர்க்கா போன்று சித்தர் சமாதிகளும் இவ்வகையில் வளர்ந்துள்ளன.

இத்தகைய வளர்ச்சி சித்தர் மரபுக்குப் பொருந்தி வருமா என்ற வினா எழுகிறது. அல்லது இத்தகைய வழிபாட்டு இடங்களை உருவாக்கியதில் ஏதாவது உள்நோக்கம் அல்லது குறிப்பிட்ட சில சமூகத்தினரின் நலனை அடிப்படையாகக் கொண்டதா என்ற வினாவையும் புறக்கணிக்க முடியாது. வரலாற்று ரீதியாக வள்ளலாரின் வாழ்விடமும் அவரது இறுதிகாலமும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் உருவாக்கிய கோயிலும் இன்று சான்றாக விளங்குகிறது. காலத்தால் முற்பட்ட சித்தர்களின் பாடல்களில் அவர்களின் காட்டிய யோகநெறி வெளிப்பட்டுள்ளது. ஓரிடத்தில் நிலைக்காமல் நாடோடிகளாக சுற்றிய அவர்கள் எங்கே தங்களது இறுதிநாட்களைக் கழித்தது பற்றியோ மறைந்தது பற்றியோ அறிவதற்கான சான்று இல்லாத நிலையில் இத்தகைய இடங்களைப் பற்றி அவர்களின் மரபின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் கோயில்களில் ஒவ்வொரு அணியாக இடம்பெற்ற நிலையில் கோயில்களைப் புறக்கணித்த சித்தர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இவ்வகையான இடங்கள் அமைக்கப்பட்டனவா என்றும் தெரியாகத் தெரியவில்லை. எனவே, இத்தகைய வளர்ச்சி மரபின் தொடர்ச்சியா அல்லது புதிய வளர்ச்சியா என்பது தெரியவில்லை. பகவத் கீதையில் அர்சுணனுக்கு இறுதியில் கிருஷ்ணர் உபதேசிக்கும் போது எல்லாவற்றையும் துறந்து தன்னைச் சரணடைய வலியுறுத்துகிறார். சித்தர் எவரும் தம்மை வழிபாடு செய்யச் சொன்னதாக அவர்கள் பாடல்களில் குறிப்பு உள்ளதா என்பதும் தெளிவில்லை. உண்மையை அடைவதற்கு ஒருவன் தன்னையே சார்ந்திருக்க வேண்டும் என்றும் அதுவே குருவின் உபதேசமாகவும் அளித்துள்ளனர். நடைமுறையில் காணப்படும்

வழிபாட்டு முறைகள் சிலவேளைகளில் அவர்களின் தத்துவ மரபுக்கு பொருந்தாமல் இருக்கவும் கூடும்.

மற்றொரு முக்கிய சிக்கல், சித்தர்களின் தோற்றம் பற்றிய படங்கள் மற்றும் சிலைகளின் வெளிப்பாடு பற்றியது. சாத்திரங்கள் குறிப்பிடும் தெய்வங்களின் உடல் நிறங்களில் கருப்பு, சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் அல்லது பொன்நிறம் விவரிக்கப்படுகின்றன. சித்தர்கள் பற்றி விவரிக்கும் பொழுது அவர்கள் வயது முதிர்ந்திருந்தாலும் இளமையாகக் காட்டப்படுவதற்கு கருமையான கேசம் கொண்ட படங்கள் அமைந்துள்ளன. ஆனால், சூபி துறவிகளின் தோற்றங்கள் யதார்த்த வடிவத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. சித்தர் என்றால் இளமைத் தோற்றம் கொண்டிருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ளதாகத் தோன்றுகிறது. குறிப்பாக பதினெண் சித்தர்களின் தோற்றப் படங்களை வரிசையாக அமைத்துக் காட்டுவதில் இதைக் காணலாம். வள்ளலார் உருவம் நிழற்படத்தில் பதியவில்லை என்று கூறப்படுகிறது. இருந்தபோதிலும் ஓவியர் எவரேனும் அவரது உண்மையான தோற்றத்தை அந்தக் காலத்தில் வரைந்திருக்க முடியும். ஆகவே, முகம்மது நபிகள் மற்றும் வள்ளலாரின் விருப்பம் சித்தர்களைப் பொருத்தவரை உண்மையாக இருக்கக் கூடும். தனது தூல உடல் தோற்றத்தை எந்த வகையிலும் வெளிப்படுத்தக் கூடாது என்று அவர்கள் கூறியுள்ளது சித்தர் மரபுக்கு பொருத்தமாகத் தோன்றுகிறது. உருவ வழிபாடு தத்துவச் சிதைவுக்கு இட்டுச் செல்லும் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். திருமந்திரம் இதற்கான தெளிவை பின்வருமாறு அளித்துள்ளது.

> தானென்று அவனென்று இரண்டாகும் தத்துவம்
> தானென்று அவனிரண்டும் தனில் கண்டு
> தானென்ற பூவை அவனடியில் சாத்தினால்
> நானென்று அவனென்கை நல்லதொன்று அன்றே (திருமந்திரம். 1607)

முடிவுரை அளிப்பதற்கு முன்பாக சில செய்திகளை குறிப்பாக இந்தியாவின் ஆன்மிக மரபைப் பொதுவாகவும் சித்தர் மரபை தனிப்பட்டும் ஆராயும் பொழுதில் தனிமனித மற்றும் சமூக வாழ்க்கைத் தரத்தைக் கவனித்து ஆராய்வது அவசியமாகிறது. வசதி படைத்தவர்கள் எவ்வகையான கருத்தியல்களால் ஈர்க்கப்படுகின்றனர் என்பதைக் கவனிக்கும் பொழுதில், வறுமையில் உள்ளவர்கள் எத்தகைய கருத்துகளால் ஈர்க்கப்படுகின்றனர் என்பதையும் ஆராய வேண்டும். தற்காலத்தில் காணப்படும் ஆன்மிக வளர்ச்சி என்பது மனிதர்களின் இரண்டு அடிப்படையான உணர்வுகளின் அடிப்படையில் இயக்கப்படுகிறது. அவற்றில் பெரும்பாலரின் வறுமையும் சிலரின் பேராசையும் அடங்கியுள்ளது என்பதை ஏற்பது சற்று கடினம்தான். இந்த இரண்டையும் கடந்தவர்களின் அறிநிலை முற்றிலும் வேறுபட்டது. தடத்தைக் கண்டவர்கள் தடத்தை விட்டுச் செல்ல வேண்டுமா அல்லது சுவடற்று சென்று விடுவதா என்பது சித்தர் மரபுக்கு உட்பட்ட அடிப்படை வினாவாகும்.

முடிவுரை

சித்தர் மரபு மதங்கள் தோன்றுவதற்கு முன்பே உலகின் பல இடங்களில் பல்வேறு காலங்களில் வழக்கத்தில் இருந்துள்ளது. மதங்களை முறையாகக் கட்டமைப்பதற்கு சித்தர் போன்ற வல்லமை கொண்ட ஒரு நாயகன் அறநெறிகளை உபதேசிக்கும் வகையில் முன்னிலைப் படுத்தப்படுவது தேவைப்பட்டது. அறநெறிகளைத் தாண்டி அவனது உயர்வான சக்தி போற்றப்பட்டு மக்களை ஆளும் வல்லமை உருவாக்கப்படுவதற்கு இது இட்டுச் சென்றாதாகத் தோன்றுகிறது. எனவே தொடக்கத்தில் மதங்களை முறையாகக் கட்டமைக்கத் தூண்டுதலாக விளங்கிய சித்தர் மரபு பிற்காலத்தில் அவற்றுக்கு ஒரு எதிர்வினையாக செயல்படும் மரபாக இருந்துள்ளது. மனிதரின் விருப்பு வெறுப்பு சிந்தனைகளால் பிறழ்ந்து போவதை இயற்கைப் பரிணாமத்துக்கு மீட்கும் முயற்சியின் வளர்ச்சியே சித்தர் மரபு. அறிவை முடக்கி நிலைகுலைய வைக்கும் மதச் சடங்குகள், மனிதரின் ஆதிக்க வேட்கை அல்லது அடிபணியும் இழிவு

ஆகியவற்றுக்கு மாற்றாக அமைந்தது சித்தர் மரபில் இணைந்துள்ள யோகநெறியாகும். சடங்குகள் ஏதுமின்றி அன்றாட வாழ்க்கை நிலையிலிருந்தே தொடங்க முடியும் என்ற தகுதியை உணர்த்துவது சித்தர் மரபு. தமக்கென்று ஒரு மதம் என்றில்லாவிட்டாலும் அனைத்து மதங்களும் தற்போது அதன் யோகநெறியைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு வளர்ந்து வருகிறது. ஒவ்வொரு மனிதருக்கும் உடல், உயிர், வாசி எவ்வாறு உண்மையாக இருக்கிறதோ அத்தகைய உண்மையைக் கொண்டது சித்தர் காட்டும் நெறியாகும். உடலை வருத்தும் தவங்களை அவர்கள் பரிந்துரைக்கவில்லை. உடலால் இன்பமும் துன்பமும் உண்டாகும் நிலையில் அவற்றை நெறிப்படுத்திக் கொண்டு செல்லும் உத்தியை அவர்கள் காட்டுகின்றனர். மிகையான தத்துவங்களையும் சடங்குகளும் இயற்கைக்கு மாறானவை என்று கண்டறிந்து ஒருவர் தன்னையே மையமாக்கி புரிந்து கொள்வதற்கானத் தூண்டுதலை அளிக்கின்றனர்.

கூடுதல் வாசிப்புகள்

அரங்க இராமலிங்கம், *சித்தர் வழி*, சிவகுரு பதிப்பகம், சென்னை, 2004.

சிதம்பரம் இராமலிங்கம், *திருவருட்பிரகாச வள்ளலார் உபதேசம்-வசனபாகம்*, அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை, (தேதி இல்லை).

கணபதி, டி. என். *தமிழ்ச் சித்தர் மரபு*, ரவி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2004.

கோவேந்தன், த. *சித்தர் பாடல்கள்*, ஆறாவது பதிப்பு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2001

சரவண முத்துப்பிள்ளை, வா. (பதி.) *பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை*, இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ், சென்னை, 1954.

சுப்பிரமணியம் சந்திரன், *உண்மையைத் தேடி,* சிவகுரு பதிப்பகம், சென்னை, 2006.

சோமு, மீ.ப. *சித்தர் இலக்கியம்* (ஆறு தொகுதிகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம், 1998-2009.

திருமூல நாயனார், *திருமந்திரம்*, காசித் திருமடம், திருப்பனந்தாள், 2005.

Chattopadhyaya, Debiprasad. *Science and Society in Ancient India,* Research India Publications, Calcutta, 1977.

Mallinson, James and Mark Singleton, *Roots of Yoga*, Penguin Classics, London, 2017.

Schmithausen, Lambert. *The Genesis of Yogacara-Vijnanvada: Responses and Reflections*, The International Institute for Buddhist Studies, Tokyo, 2014.

Srinivasa Ayyangar, T.R. *The Yoga Upanisads*, The Adyar Library, Chennai, 1938.

Swami Sivananda, *Kundalini Yoga*, Divine Life Society, Sivananda Nagar, 1996.

Swami Vivekananda, *Raja Yoga*, Advaita Ashrama, Calcutta, 1978.

Watts, Alan. *Psychotherapy: East and West*, Pantheon Books, New York, 1961.

Woodroff, Sir John. (Arthur Avalon), *The Serpent Power: The Secrets of Tantric and Shaktic Yoga*, Ganesh and Company, Madras, 1990.